சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **188 / 2023**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **03.03.2026**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : சிவகுமார் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல் தகவல் அறிக்கை - ம.சா.ஆ.1

2) விடுவிப்பு சான்று - ம.சா-ஆ.2. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தியதாக கூறக்கூடிய முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் (பெர்மிட்) மற்றும் வாகனத்திற்கு தகுதி சான்று இல்லை என்றால் சரியல்ல. மனுவில் கூறியவாறு விபத்துநடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற பகுதியானது போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் தான் முதல் எதிர்மனுதாரர் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடக்க முயன்றபோது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு என்னுடைய கவனகுறைவு தான் முழுகாரணம் என்பதால், இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. காப்பீட்டு விதிமுறைகளையும், மோட்டார் வாகன சட்டத்தையும் மீறி முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் செயல்பட்டியிருப்பதால் எனக்கு ஏதேனும் இழப்பீடு கிடைக்கவேண்டும் என்றால் அதனை முதல் எதிர்மனுதாரர் தான் வழங்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம்

தான் முழுமையாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமும், வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மருத்து செலவிற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.03 17:33:01 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.